TNKR080005712018

**சார்பு நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை : – திரு.ஈ.முத்துசாமி, பி.ஏ., பி.எல்.,**

**மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாய நீதிபதி, குளித்தலை.**

**2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10–ஆம் தேதி செவ்வாய்க்கிழமை**

**MCOP No.334/2018**

(CNR No.TNKR08-000571-2018)

1. குப்புசாமி
2. காளீஸ்வரி ... மனுதாரர்கள்

/எதிர்/

1. மருதமுத்து
2. The Manager, Universal Sompo General Insurance Co Ltd., Chennai. ... எதிர்மனுதாரர்கள்

இம்மனு கடந்த 24.02.2026–ஆம் தேதி இறுதியாக என் முன்பு விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.B.மீனாட்சி சுந்தரம், அவர்கள் முன்னிலையாகியும், முதல் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.துரை, அவர்கள் முன்னிலையாகி, பின்னிட்டு எதிருரை தாக்கல் செய்யாததால் முதல் எதிர்மனுதாரர் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.நாகராஜன், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரை கேட்டறிந்த பின்பும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் ...

**உத்தரவு**

மனுதாரர்களால் மோட்டார் வாகன சட்டப்பிரிவு 140 மற்றும் 166–ன் கீழ் இழப்பீடாக ரூ.30,00,000/– கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1)** மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில், மனுதாரர்கள் வீரவள்ளி, கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம் என்கின்ற முகவரியில் குடியிருந்து

வருவதாகவும், முதல் எதிர்மனுதாரர் V3, I U D P காலனி, செல்வபுரம், கோயம்புத்தூர் என்கின்ற முகவரியில் குடியிருந்து வருவதாகவும், இரண்டாவது எதிர்மனுதாரர் பழைய க.எண்.44, புதிய க.எண்.39, வஜ்ரம் டவர்ஸ், பிளாட் எண்.103, முதல் தளம், ஹால்ஸ் ரோடு, Egmore, சென்னை என்கின்ற முகவரியில் அலுவலகம் வைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

2) கடந்த 15.04.2018–ம் தேதி அன்று விபத்தில் இறந்துபோன பார்த்திபன் என்பவர் TN 57 BB 1381 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் காங்கேயத்திலிருந்து ஆவிளிப்பட்டிக்கு செல்வதற்காக தாராபுரம் டூ ஒட்டன்சத்திரம் ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சாலையின் இடது ஓரமாக சென்று கொண்டிருந்த போது, அதே ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த முதல் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 99 F 7954 என்ற பதிவெண் கொண்ட காரை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று மேற்படி பார்த்திபன் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியதால் விபத்து ஏற்பட, மேற்படி விபத்திற்காக திண்டுக்கல் மாவட்டம், அம்பிலிக்கை காவல் நிலையத்தில் குற்ற எண்.65/2018 இ.த.ச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

3) மோட்டார் வாகன சட்டப்பிரிவு 166(2)–ல் *"Every Application under sub-section (1) shall be made, at the option of claimant, either to the Claims Tribunal having jurisdiction over the area in which the accident occurred or to the Claims Tribunal within the local limits of whose jurisdiction the claimant resides or carries on business or with the local limits of whose jurisdiction the defendants resides, they shall be in such form and contain such particulars as may be prescribed"* என குறிப்பிடப்பட்டுள்ளது.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் மனுதாரர்கள் இந்நீதிமன்ற ஆள்வரையறைக்குள் குடியிருப்பதாக கூறியிருப்பினும், அவ்வாறு மனுதாரர்கள் இந்நீதிமன்ற ஆள்வரையறைக்குள் குடியிருந்து வருகிறார் என்பதற்காக ஆவணங்களை தாக்கல் செய்யுமாறும், மேற்படி இம்மனுவினை விசாரணை

செய்வதற்கு இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரையறை உள்ளதா? என்பது குறித்தும் மனுதாரர்களிடம் வினா எழுப்ப, மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர்கள் இந்நீதிமன்ற ஆள்வரையறைக்குள் குடியிருப்பதற்கான ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை என கடந்த 24.02.2026-ம் தேதி அன்று குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார். அவ்விதத்தில், ***"The Hon'ble Madurai Bench of Madras High Court in Royal Sundaram Alliance Insurance Co.Ltd Vs Manoj Kumar and Ayyappan dated 28.11.2016 in Tr.CMP(MD) Nos.482 to 485 of 2016*** *held as follows:- "It is needless to state that minimum rule which followed by the Tribunals / Courts, while scrutinizing applications is that the residential proof has to be verified, by asking the claimants to produce the original documents, regarding their permanent residential addresses, through the recognized Government Identity Cards. In the absence of any such proof for residence, the MCOP applications need not be numbered. A person who is not having any such documents, in the case, where there is no government Identity Cards, at least, a sworn affidavit is required the residential address"* என கூறப்பட்டுள்ளது. மேற்படி முன்தீர்ப்பானது இம்மனுவின் தன்மைக்கும், பொருண்மைக்கும் பொருந்துவதாக உள்ளது.

**5)** மனுதாரர்களோ, முதல் எதிர்மனுதாரரோ இந்நீதிமன்ற ஆள்வரையறைக்குள் குடியிருக்கவில்லை என்பதால், இரண்டாவது எதிர்மனுதாரரின் நிறுவனம் இந்நீதிமன்ற ஆள்வரையறைக்குள் இல்லை என்பதாலும், மேற்படி மனுவினை விசாரணை செய்வதற்கு இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரையறை இல்லை என முடிவு செய்யப்படுகிறது.

**6) முடிவாக,**

**(அ)** மனுதாரர்களின் மனுவானது திருப்பப்படுகிறது. (Return)

**(ஆ)** மனுதாரர்கள், உத்தரவு பிறப்பிக்கப்பட்ட இரண்டு மாதங்களுக்குள் உரிய நீதிமன்றத்தில் இந்த மனுவினை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.10 17:19:31 +0530

தீர்ப்பாய நீதிபதி,
குளித்தலை.